


**06.10.2025**

# 40. தியாகம் ஒன்றே “உயர்வு – தாழ்வு” பார்ப்பதில்லை!

இமாலய மலையில், கொடிய வயிற்று வலியில் சுருண்டு சாகக் கிடந்த ஒரு மனுஷனை, *சாதுவோடு* அமர்ந்து உபதேசம் கேட்ட ஒரு பையன், அவரைத் தன் முதுகில் போட்டுக்கொண்டு சுமார் 2 மைல் அந்த மலையின் கரடுமுரடான பாதையில் நடந்துவந்து, அவர் உயிரை காப்பாற்றினான். தொற்று நோயில், அழுகி இருந்த அந்த மனிதனை உயர்குல வாலிபன் தூக்கிவந்த செயலுக்கு ‘ஒரே காரணம்’ *சாது* அவர்களோடு சேர்ந்து பெற்றுக்கொண்ட **இயேசுவின் தியாக ஆவியே** ஆகும். அவன் தூக்கி வந்த செயலைவிட, அவனிடமிருந்து ஒளி வீசிய அன்பின் சுடரே அன்று எல்லோர் மனதையும் பரவசப்படுத்தியது!

*சாதுவை* சூழ்ந்திருந்த மக்களில், ‘குறிப்பாய்’ வாலிபர்களின் உள்ளத்தை மாற்றிய மகிமை சொல்லி முடியாதது!

*சாது சுந்தர் சிங்கின்* வாழ்க்கையோ முற்றிலும் அனல் கொண்ட தியாகச் சுடராய் இருந்தது. அவர் தனக்காக வாழ்ந்தார் எனச் சொல்வதற்கு, துருவி துருவி பார்த்தாலும், யாதொரு தடயமும் யாதொருவராலும் காண முடியவில்லை!

**– ரத்னம்**